RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 197 | ஜூலை.23 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# டெல்லியில் எதிர்க்கட்சிகளின் போராட்டத்துக்கு தவெக ஆதரவு: முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: ஜூலை.23-

"ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டது ஜனநாயகத்துக்கு எதிரானது. நம் மக்களின் உணர்வுகளையும் மாணவர்களின் உணர்வுகளையும் ஒன்றிய அரசு மதித்தே ஆக வேண்டும். அதன் வெளிப்பாடாக, நீட் தேர்வு அறவே அகற்றப்பட வேண்டும் என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "நீட் தேர்வு குளறுபடிகளை எதிர்த்து டெல்லியில் நடைபெற்ற இளைஞர்கள் போராட்டத்துக்கு ஆதரவாகக் களமிறங்கிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டது, ஜனநாயகத்துக்கு எதிரானது. ஒன்றிய அரசின் இந்தச் செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கவை.




நேற்று நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சிகள் சார்பில் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெறும் போராட்டத்துக்கு தமிழக வெற்றிக் கழகம் தனது முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறது.

நீட் தேர்வைப் பொறுத்தவரை நீட் தேர்வு முறை அறவே அகற்றப்பட வேண்டும் என்பதே தவெகவின் சமரசமற்ற நிலைப்பாடு. மாணவர்களை மட்டுமல்லாது அவர்களது குடும்பங்களையும் வெகுவாகப் பாதிக்கும் நீட் தேர்வு முறையை வைத்து வாக்கு அரசியல் செய்வதற்காக, பொய்யான வாக்குறுதிகளை நாம் ஒருபோதும் அளிக்கமாட்டோம்.

நீட் தேர்வு போன்றவை ஒழிக்கப்பட வேண்டுமெனில், முதலில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும். அது மட்டுமே ஒரே நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும். ஒருவேளை, அதில் ஏதேனும் சட்ட நடைமுறைச் சிக்கல்கள் இருக்குமெனில், அவற்றை நிவர்த்தி செய்யும் வரை, இடைக்காலத் தீர்வாக, Special Concurrent list உருவாக்கி, அதன் மூலம் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

அதன் வாயிலாகக் கல்வி மற்றும் மருத்துவக் கல்வி உள்ளிட்ட விஷயங்களில் மாநிலங்களுக்கு முழு அதிகாரம் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். இதுதான் நிரந்தரத் தீர்வு மற்றும் இடைக்காலத் தீர்வு நோக்கிய நம்முடைய பார்வை. இதை, கட்சி தொடங்கியபோதே, தவெக சார்பாக நடைபெற்ற கல்வி விருது வழங்கும் விழாவிலேயே ஆழமாக வலியுறுத்தி இருக்கிறோம்.

நம் மக்களின் உணர்வுகளையும் மாணவர்களின் உணர்வுகளையும் ஒன்றிய அரசு மதித்தே ஆக வேண்டும். அதன் வெளிப்பாடாக, நீட் தேர்வு அறவே அகற்றப்பட வேண்டும். இந்தச் சிக்கலுக்கு இது மட்டுமே ஒரே தீர்வு என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## "நீட் ஒழிப்பே அனைத்துப் பிரச்சினைகளுக்குமான நிரந்தரத் தீர்வு" மு.க.ஸ்டாலின்

சென்னை: ஜூலை.23-

"நீட் ஒழிப்பே அனைத்து பிரச்சினைகளுக்குமான நிரந்தரத் தீர்வாக அமையும்" என முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.





இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தலைநகர் டெல்லியில் மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் நாட்டின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்துள்ளது. நீட் எனும் தேர்வு முழுக்க முழுக்க முறைகேடுகளுக்காக டிசைன் செய்யப்பட்டது என முதன்முதலில் எச்சரித்தது நாம்தான். அதனால்தான், இந்தத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்தே நீட்டின் தீமைகளை எடுத்துச் சொல்லித் திமுக எதிர்த்து வருகிறது.

இந்தியாவுக்கே முன்னோடியாக சமூக நீதியைப் பாதுகாக்கப் போராடி, முதல் அரசியல் சாசன திருத்தத்துக்கு (First Constitutional Amendment) வழிகோலிய தமிழ்நாட்டின் கோரிக்கையும் நீட் ஒழிப்பு என்பதே. மற்ற எந்தக் கோரிக்கைகளை விடவும் #AbolitionOfNEET என்பதே இந்தப் போராட்டங்களின் மையப்புள்ளியாக இருக்க வேண்டும்.

நீட் ஒழிப்பே அனைத்துப் பிரச்சினைகளுக்குமான நிரந்தரத் தீர்வாக அமையும். #BanNEET #SaveStudents" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தலைநகரில் ஜனநாயகம் நசுக்கப்படுகிறது : அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கண்டனம்

சென்னை: ஜூலை.23-

நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது தாக்குதல் நடத்துவதால் தலைநகரில் ஜனநாயகம் நசுக்கப்படுகிறது என அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கண்டனம் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு முறைகேடுகளுக்கு காரணமான மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் டெல்லியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இவர்களுக்கு ஆதரவாக நேற்று மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி மற்றும் காங்கிரஸ் எம்பிக்கள் பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோரை காவல்துறையினர் கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

இதையடுத்து, நீட் தேர்விற்கு எதிரான போராட்டத்திற்கு பல்வேறு அரசியல் கட்சியினர் ஆதரவு தெரிவித்து வந்தனர். அந்த வகையில், நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவாகவும், ராகுல் காந்தி கைது



செய்யப்பட்டதை கண்டித்தும் தமிழக பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தனது சமூக வலைதளப்பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், ""நீட் தேர்வு என்ற தகுதித் தேர்வு மருத்துவ மாணவர்களுக்கு கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பு வந்தபோதே, அதற்கான முதல் எதிர்ப்புக் குரல் தமிழகத்தில் இருந்துதான் ஒலித்தது; தொடர்ந்து தமிழகத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் எதிர்ப்புக் குரலை இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவும் எதிரொலிக்கிறது. அகில இந்திய அளவில் மாணவர்கள் நீட் தேர்வுக்கு எதிரான அறப்போராட்டங்களை ஜனநாயக வழியில் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அந்த மாணவர்களின் அறவழிப் போராட்டத்தின் நியாயங்களை உணராமல் அவர்களை குண்டுக்கட்டாகத் தூக்கியும், கடுமையாகத் தாக்கியும் மத்திய அரசு கைது செய்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

அதேபோல், டெல்லியில் நடைபெற்ற இளைஞர்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவாக களமிறங்கிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கா காந்தி ஆகியோர் டெல்லி காவல்துறையால் இழுத்துச் செல்லப்பட்டும், குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்றும் கைது செய்யப்பட்டிருப்பது ஜனநாயக உரிமைகள் மீதான அப்பட்டமான தாக்குதல்; இது வன்மையான கண்டனத்திற்குரிய செயல்.

மாணவர்களின் நலனுக்கு எதிராக மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட நீட் தேர்வை எதிர்த்து, எழுச்சிமிக்க போராட்டத்தை முன்னெடுக்கும் மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, மத்திய அரசு உடனடியாக நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்.

அதுபோல், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். மேலும், நீட் தேர்வை ரத்து செய்வதற்கான ஒவ்வொரு அடியையும் மிக உறுதியாக நாங்கள் எடுத்து வைப்போம். மாணவர்கள் நலனுக்கும், மாணவர்கள் உரிமைக் குரலுக்கும் என்றும் துணையிருப்போம்" என்று அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தெரிவித்துள்ளார்.

## மாணவர்கள் அறவழியில் போராடினால் ஆதரிப்போம்; அமைச்சர் ராஜ்மோகன்

சென்னை: ஜூலை.23-

மாணவர்கள் அறவழியில் போராடினால் ஆதரிப்போம்; சாலை என்பது போராடுவதற்கான இடம் இல்லை என அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.



சென்னை எழும்பூரில் உள்ள பிரசிடென்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், 'நீர் எழில் பள்ளி' திட்டத்தை அமைச்சர் ராஜ்மோகன் துவங்கி வைத்தார். பிறகு நிருபர்களிடம் ராஜ் மோகன் கூறியதாவது: மாணவர்களின் அறவழி போராட்டம், அமைதியான போராட்டத்தை ஆதரிக்கிறோம்.

இதில் எந்த மாற்று கருத்தும் கிடையாது. உரிய அனுமதி பெற்று மாணவர்கள் அறவழியில் போராடினால் பிரச்னை இல்லை. திடீரென தூண்டுதல் காரணமாக போராட்டம் நடத்தினால் மக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது.

சாதாரண மக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் போராட்டம் நடத்தப்பட்டதால் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. சாலை என்பது போராடுவதற்கான இடம் இல்லை. நீட் தேர்வு வேண்டாம் என்பதே தமிழக அரசின் நிலைப்பாடு. நீட் ஒழிப்பே நிரந்தர தீர்வு என்பது தான் தவெக அரசின் நிலைப்பாடு.

டில்லியில் ஜனநாயக முறையில் போராட்டம் நடைபெறுகிறது. மாணவர்களின் போராட்டத்திற்கு மத்திய அரசு மதிப்பளிக்க வேண்டும். கல்வியை மாநில பட்டியலுக்கு வர வேண்டும். இவ்வாறு ராஜ் மோகன் கூறினார்.

## முன் ஜாமின் வழங்கியும் ஏன் சரண் அடையவில்லை: செந்தில் பாலாஜிக்கு ஐகோர்ட் கேள்வி

சென்னை: ஜூலை.23-

முன் ஜாமின் வழங்கியும் தற்போது வரை சரண் அடையாதது ஏன் என திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு சென்னை ஐகோர்ட் கேள்வி எழுப்பி உள்ளது.

தவெக எம்.எல்.ஏ வை பேரம் பேசி ஆட்சி கவிழ்க்க முயன்றதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அசோக் குமாருக்கு சென்னை உயர்நீதிமன்றம் நிபந்தனையுடன் முன்ஜாமின் வழங்கி உள்ளது.

முன்ஜாமின் பெற்ற நிலையில், போலீசார் தங்களை துன்புறுத்தக் கூடாது என உத்தரவிடக் கோரி ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தனர். இருவரது மனுக்களையும் தள்ளுபடி செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

''முன் ஜாமின் வழங்கப்பட்டு இதுவரை இருவரும் சரணடையவில்லை; சரணடையாத பட்சத்தில் துன்புறுத்தக்கூடாது என எப்படி கோர முடியும்? என நீதிபதி கேள்வி எழுப்பி உள்ளார்.

## தி.மு.கவிற்கு சிறை என்பது பழக்கப்பட்டதுதான்': எம்.எல்.ஏக்கள் கைது குறித்து ஆர்.எஸ். பாரதி பேச்சு

சென்னை: ஜூலை.23-

எங்களுக்கு சிறை என்பது பழக்கப்பட்டதுதான்; அதனால் எங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை என தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆவேசமாக பேசியுள்ளார்.

சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில், தி.மு.க ராயபுரம் முன்னாள் பகுதி செயலாளர் கட்பீஸ் பழனியின் 7ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும் அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் டி.கே. எஸ். இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, "ஆட்சியில் இருந்தபோது எப்படி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதோ, அதேபோல் தற்போது ஆட்சியில் இல்லாத நிலையிலும் நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. நாங்கள் தேர்தலில் தோற்றது போலவே




தெரியவில்லை.

இன்று எதிர்க்கட்சியாக இருந்தாலும், கூட்டம் தொடங்கியதிலிருந்து தற்போது வரை கலைந்து செல்லாமல் தொண்டர்கள் நிற்பதுதான் தி.மு.கவின் பலம். 76 ஆண்டுகளாக இந்தக் கட்சி நிலைத்திருப்பதற்கு காரணம் தொண்டர்கள்தான்" என புகழாரம் சூட்டினார்.

தி.மு.க., எம்.எல்.ஏ மார்க்கண்டேயன் கைது குறித்து மறைமுகமாக பேசிய அவர், "தற்போது தி.மு.கவினர்கள் மீது வழக்குகளை போடுகிறார்கள்; கைது செய்திகிறார்கள். தி.மு.கவுக்கு இதெல்லாம் புதிதல்ல. பழக்கப்பட்ட ஒன்றுதான். சிறைச்சாலையை சுத்தப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். இதனால் எங்களுக்கு எந்த ஆபத்தும், கவலையும் இல்லை" எனத் தெரிவித்தார்.

ஜூலை 18 அன்று கோவில்பட்டியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில், முதலமைச்சர் விஜய் குறித்து அவதூறு பேசியதாக திங்கட்கிழமை (ஜூலை 20) மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்ட நிலையில், ஆர்.எஸ். பாரதி இந்த கருத்தை பதிவு செய்துள்ளார்.

முன்னதாக இந்த நிகழ்ச்சியில் பேசிய தி.மு.க செய்தித் தொடர்பாளர் டி.கே. எஸ். இளங்கோவன், "திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு பெரும் கோட்டை. அதில் இருக்கும் ஒவ்வொரு செங்கலும் அந்தக் கோட்டையை பாதுகாக்கும் நோக்கத்தோடு செயல்படுகின்றன. வெற்றியும், தோல்வியும் இந்த இயக்கத்தை ஆட்டிப் பார்த்ததில்லை.

திமுகவை அசைத்துப் பார்ப்பேன், ஆட்டிப் பார்ப்பேன், இல்லாமல் செய்வேன் என்று கூறியவர்கள் பலர் இன்று எங்கே இருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் இன்னும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறார்கள். இதுபோன்ற அர்ப்பணிப்பு மிக்க தொண்டர்கள் இருப்பதால் திமுக இன்னும் நூறாண்டுகள் சிறப்பாக செயல்படும்" என கூறினார்.



## செங்குன்றத்தில் கிருதி சுசூகி பைக் ஷோரூம் திறப்பு விழா

மாதவரம், ஜூலை.23-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நெல் அரிசி வணிகர் சங்க திருமண மண்டபம் அருகே கிருதி சுசூகி பைக் ஷோரூம் திறப்பு விழா கிருதி சுசூகி பைக் ஷோரூம், ஏவிஐ மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் இயக்குநர் அஜித்குமார் தலைமையேற்று ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். நிர்வாக இயக்குநர்கள் அன்ஹீத்குமார், அமிஷ்குமார், அக்ஷய் குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாகஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் பாடியநல்லூர் ஜெயலட்சுமி நடராஜன், புள்ளிலைன் தமிழ்ச்செல்விரமேஷ், கேஆர்வி குருப்ஸ் தலைவர் கே.ஆர். வெங்கடேஷ், எம்.எஸ். குருப்ஸ் சன் முனியாண்டி, பாடியநல்லூர் ஊராட்சி மன்ற முன்னாள் துணைத்தலைவர் ஆனந்த், வி.கே. எண்டர்பிரைசஸ் வி.கே. சங்கர், பேஸ்மேன் பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குநர் தீப் சந்த் லூனியா, புள்ளிலைன் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆர்.சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து வாழ்த்தினர்.

இதில் கிருதி சுசூகி, ஏவிஐ மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாகிகள் ஊழியர்கள், குடும்பத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## குன்னூர் இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் 16 தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் டீ சர்வ் ஆகியவற்றின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம்

குன்னூர், ஜூலை.23-

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டம் குன்னூர் இண்ட்கோ சர்வ் அலுவலகத்தில், இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் 16 தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் டீ சர்வ் ஆகியவற்றின் செயல் பாடுகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன்ராஜா தலைமையில் நடைபெற்றது.




இக்கூட்டத்தில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் சிறு விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படும், இண்ட்கோசர்வ் என்பது இந்தியாவின் மிகப்பெரிய தேயிலை கூட்டுறவு கூட்டமைப்பு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. இக்கூட்டமைப்பில் நீலகிரி மாவட்டத்திலுள்ள 16 தேயிலை தொழிற் சாலைகளை ஒருங்கிணைத்து சுமார் 30,000 சிறு தேயிலை விவசாயிகளுடன் இணைந்து பச்சைத் தேயிலைகளை கொள்முதல் செய்து ஆண்டுக்கு சுமார் 13 மில்லியன் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்கிறது. இத்தொழிற்சாலையில் மவுண்டன் ரோஸ் டீ, ஊட்டி டீ மற்றும் ப்ளுமண்ட் டீ உள்ளிட்ட பல்வேறு டீ தூள் தயாரிப்பு செய்யப்படுகிறது.மேலும், இண்ட்கோசர்வ் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் செயலாக்க நிலை, தேயிலை தோட்ட தொழிலாளர்கள், தேயிலை விவசாயிகள் மற்றும் பயனாளிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் மற்றும் அவற்றை மேலும் விரைவாகவும் திறம்படவும் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும், இண்ட்கோசர்வ் தேயிலை தொழிற்சாலைகளின் செயல்திறன் மற்றும் ஒட்டு மொத்தமுன்னேற்றத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பல்வேறு அம்சங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.மேலும், இந்நிறுவனத்தின் வளர்ச்சி, உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாகவும் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தொடர்புடைய அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது என தெரிவித்தார்.முன்னதாக, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள், இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்தும் இந்நிறுவனத்தின் சார்பில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைகளின் வகைகளையும் மற்றும் விவசாயிகளுக்கான தேயிலை அறுவடை செய்வதற்கான நவீன இயந்திரத்தினையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 1 நபருக்கு நீட் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி மற்றும் தாய்கோ வங்கி சார்பில் 3 நபர்களுக்கு சிறுதேயிலை விவசாயிகள் தனிநபர் கடனுதவிகளையும் வழங்கினார்.இந்நிகழ்வின் போது, இண்ட்கோசர்வ் முதன்மை செயல் அலுவலர் ராஜாகோபால் சுன்காரா , மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு , பொது மேலாளர் (இண்ட்கோசர்வ்) திருமால் ராஜேந்திரன் , மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) பிரேம்குமார் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தாராபுரத்தில் வெடித்த போராட்டம்! 54,000 ஏக்கர் விவசாயிகள் ஆவேசம்!

.திருப்பூர், ஜூலை.23-

அமராவதி அணை நீரை திறக்காத அதிகாரி! தாராபுரத்தில் 150 கிராம விவசாயிகள் முற்றுகை!தாராபுரம் பரபரப்பு!திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் பழைய ஆயக்கட்டு விவசாயிகள் திடீர் கண்டன ஆர்ப்பாட்டம்!முதல்வர் உத்தரவையே மதிக்காத அதிகாரியா?அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு 54,000 ஏக்கருக்கு அவசர தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டும், அதை செயல்படுத்தாமல் கிடப்பில் போட்டுள்ளார் அமராவதி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் ஆர்.சுப்பிரமணியன்.இதை கண்டித்து தாராபுரம் அண்ணா சிலை அருகே, பாசன சங்க தலைவர் சந்தானம் தலைமையில் 150க்கும் மேற்பட்ட



கிராமங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆவேச ஆர்ப்பாட்டம்!ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் பேரணியாக நடந்து வந்து திடீரென பொதுப்பணி துறை செயற்பொறியாளர் அலுவலகத்தை முற்றுகை.

அணையில் தற்போது 50 அடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஆற்றில் வினாடிக்கு 658 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.அதில் கூடுதலாக 500 கன அடி தண்ணீரை பழைய ஆயக்கட்டுக்கு திறக்க வேண்டும்!இல்லையெனில் புதிய ஆயக்கட்டுக்கு செல்லும் ஷட்டரை அடைத்து பழைய ஆயக்கட்டுக்கு தண்ணீர் தர வேண்டும்!இல்லையெனில் பொதுப்பணித்துறை அலுவலகத்தை விட்டு நகர மாட்டோம் எனக்கூறி விவசாயிகள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் குதித்துள்ளதால் தாராபுரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது!



■ திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தாமலேரிமுத்தூர் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில், 1060 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் Dr.N.திருப்பதி (திருப்பத்தூர்), எஸ்.எஸ்.பி.சையத் பாரூக் பாஷா (வாணியம்பாடி) ஆகியோர் முன்னிலையில் (21.07.2026) அன்று வழங்கினார். உடன் மாதனூர் ஒன்றியக்குழு தலைவர் சுரேஷ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் சு.சீனிவாசன், திருப்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன், வட்டாட்சியர் நவநீதன், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) இளங்கோ, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், அண்ணாண்டபட்டி ஊராட்சியில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் (Special Area Development Programme 202425) திட்டத்தின் கீழ் ரூ.31.30 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (21.07.2026) அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் செள.தமிழரசி, செயற்பொறியாளர் பா.சங்கீதா, திருப்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெ.மணவாளன், இராஜேந்திரன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், தொட்டமஞ்சி ஊராட்சி, கொடக்கரை கிராமத்தில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற பழங்குடியின நல மக்கள் 102 நபர்களுக்கு ரூ.5 கோடியே 84 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பில் வீடுகள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் இன்று (21.07.2026) நேரில் பார்வையிட்டு, மலைவாழ் மக்களிடம் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் உமா மகேஸ்வரி, தாட்கோ செயற்பொறியாளர் சுதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## பர்கூர் அருகே 2,500 ஆண்டுகள் பழமையான ஈமப்பேழை கண்டுபிடிப்பு

கிருஷ்ணகிரி, ஜூலை.23-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே கந்திகுப்பத்தில் கோயில் கட்டுவதற்காக குழி தோண்டியபோது, 2,500 ஆண்டுகள் பழமையான ஈமப்பேழை மற்றும் கருப்புசிவப்பு நிற மண்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.தகவலறிந்த வருவாய்த்துறையினர் புதைப்பொருட்களை மீட்டு பாதுகாப்பாக எடுத்துச் சென்ற நிலையில், மாவட்ட அருங்காட்சியக காப்பாட்சியர் சிவகுமார் ஆய்வு மேற்கொண்டார். இதில் எலும்புத் துண்டுகள், இரும்பு ஆயுதத் துண்டு மற்றும் குலக்குறியீடுகளுடன் கூடிய மண்பாண்டங்கள் கிடைத்துள்ளதால், இது ஒரு குழுத் தலைவனின் ஈமப்பேழையாக இருக்கலாம் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம், ஜூலை.23-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் ராஜாங்கம் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ யோகலிங்கேஸ்வரர் ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தில் 51ம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 13ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், கங்கைநீர் திரட்டுதல், கூழ்வார்த்தல், பதிவிளக்கு பூஜை மற்றும் அம்மனுக்கு அபிஷேகம் செய்து சிறப்பு அலங்காரத்துடன் மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் 100க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் அறுசுவை அன்னதானம், சுவையான குளிர்பானங்களை பக்தர்களுக்கு வழங்கினர். இத்திருவிழாவிற்கு ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வான வேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.

## கிருஷ்ணகிரி தாசில்தார் அலுவலக லஞ்ச ஒழிப்பு சோதனை: 10 பேர் மீது வழக்கு

கிருஷ்ணகிரி, ஜூலை.23-

கிருஷ்ணகிரி தாசில்தார் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை நடத்திய திடீர் சோதனையில் கணக்கில் வராத ரூ.2.22 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.இதுதொடர்பாக தலைமையிடத்து துணை தாசில்தார், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், முதுநிலை வரைவாளர் மற்றும் இடைத்தரகர்கள் உள்ளிட்ட 10 பேர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறது.

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாதாந்திர சட்டம் ஒழுங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டம்

தேனி, ஜூலை.23-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில்மாதாந்திர சட்டம் ஒழுங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.எஸ்.பிரவின் கௌதம் ., முன்னிலையில் நடைபெற்றது .இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் கண்டறியப்பட்டவுடன் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கல்விக்கூடங்கள், பணியிடங்கள் மற்றும் பொது இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். பொதுமக்கள் மற்றும் பெண்களிடம்




இருந்து பெறப்படும் ஒவ்வொரு புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் ஆக்கிரமிப்புகளைஅகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் பயன்படுத்துவது முக்கிய காரணமான உள்ளதால் அதனை முற்றிலும் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சட்டவிரோதமாக மதுவிற்பனை செய்வது குறித்து தொடர்ச்சியாக கண்காணித்து , விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தலைக்கவசம் அணிதல், நான்கு சக்கர வாகனத்தில் செல்லும்போது சீட்பெல்ட் அணிதல், முறையான ஆவணங்கள் இன்றி இயக்கப்படும் வாகனங்கள் குறித்து காவல் துறையினர் மற்றும் வட்டாரப் போக்குவரத்து துறையினர் ஒருங்கிணைந்து கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆபத்தான இடங்களில் கட்டாயம் எச்சரிக்கை பலகைகள் வைக்கப்பட வேண்டும்.முழுமையான பாதுகாப்பை உறுதிசெய்ய அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் .மகேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் .இராமகிருஷ்ணன், அலுவலக மேலாளர் (குற்றவியல்)சத்தியபாமா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூலை.23-
தேனி மாவட்ட காவல்துறையினர்.பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் செ.கமலி 261 பயனாளிகளுக்கு ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

நீலகிரி, ஜூலை.23-
நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் செ.கமலி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், 261 பயனாளிகளுக்கு ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் 250 பயனாளிகளுக்கு ரூ.12.50 இலட்சம் மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளையும், தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்புற வாழ்வார இயக்கம் மகளிர் திட்டம் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.30 இலட்சம் மதிப்பில் வங்கி கடன் இணைப்புகளையும், மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் 1 பயனாளிக்கு ரூ.9 இலட்சம் மதிப்பில் சுய உதவி கடனுதவிகளையும், மாவட்ட சமூக நலத்துறை சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பில் வைப்பு பத்திரத்தினையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.02 இலட்சம் மதிப்பில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையினையும் என மொத்தம் ரூ.261 பயனாளிகளுக்கு ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, அரசின் நலத்திட்ட உதவிகளை பொதுமக்கள் அறிந்து கொண்டு நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மீன்வளப் பொறியியல் பட்டதாரிகளின் எதிர்காலம் - உரிய அங்கீகாரம் கிடைக்குமா?

சென்னை, ஜூலை.23-
தமிழகத்தின் மீன்வள வளங்களை அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் நிலையான வளர்ச்சி அடிப்படையில் மேம்படுத்தும் உயரிய நோக்குடன், தமிழ்நாடு அரசு 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தை நிறுவியது. பின்னர், 2018 ஆம் ஆண்டு, இப்பல்கலைக்கழகத்திற்கு தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU) என்ற பெயர் சூட்டப்பட்டது. கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் மூலம் மீன்வளத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான மனித வளத்தை உருவாக்குவதே இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப் பார்வை "Harnessing the Science of Fisheries for Food, Nutrition and Livelihood" என்பதாகும். இப்பல்கலைக்கழகம் இன்று மீன்வள அறிவியல், மீன்வளப் பொறியியல், உணவுத் தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு தொழில்முறை பட்டப்படிப்புகளை வழங்கி வருகிறது. UGC 12(B), ICAR மற்றும் AICTE போன்ற தேசிய அங்கீகாரங்களைப் பெற்றுள்ள இப்பல்கலைக்கழகம், மீன்வளக் கல்வியில் நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே B.Tech. Fisheries Engineering என்ற நான்கு ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டது. இந்தப் படிப்பு, மீன்வளத் துறைக்குத் தேவையான தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தில் சிவில், மெக்கானிக்கல், மின்சாரம் மற்றும் மின்னணு, கணினி அறிவியல், குளிர்பதன தொழில்நுட்பம், மீன் பதப்படுத்தும் இயந்திரங்கள், மீன்பிடிக் கப்பல்கள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன்வள உள்கட்டமைப்பு, நீர்வளப் பண்ணைகள் வடிவமைப்பு உள்ளிட்ட பொறியியல் பாடங்கள் இடம்பெற்றுள்ளன. பல்கலைக்கழகத்தின் அதிகாரப்பூர்வ விளக்கத்தின்படி, இந்தப் படிப்பின் மூலம் உருவாகும் பொறியாளர்கள் உயர் தொழில்நுட்ப மீன்வளப் பண்ணைகள், குஞ்சு உற்பத்தி மையங்கள், மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், குளிர்சங்கிலி (Cold Chain) அமைப்புகள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடிக் கப்பல்கள் மற்றும் உபகரணங்கள், மீன்வள உள்கட்டமைப்புகள் ஆகியவற்றின் வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்பு மற்றும் மேலாண்மையில் முக்கிய பங்கு வகிக்கக்கூடியவர்களாக உருவாக்கப்படுகின்றனர்.

தமிழகத்தில் மீன்வளத் துறை வேகமாக வளர்ந்து வரும் நிலையில், அதற்கேற்ற தொழில்நுட்ப மனித வளத்தை உருவாக்குவதற்காக இந்தப் பட்டப்படிப்பு அறிமுகப்படு த்தப்பட்டது என்பது பல்கலைக்கழகத்தின் நோக்கத்திலிருந்தே தெளிவாகிறது. எனினும், இந்தப் படிப்பை முடிக்கும் பட்டதாரிகளுக்கு மீன்வளத் துறையில் உள்ள அனைத்து பொருத்தமான அரசுப் பணிகளிலும் போதுமான வாய்ப்புகள் கிடைக்கிறதா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.ஒரு தொழில்முறைப் பொறியியல் பட்டப்படிப்பை அரசு தொடங்குவதன் நோக்கம், அந்தத் துறைக்குத் தேவையான திறமையான பொறியாளர்களை உருவாக்குவதுதான். அப்படியானால், அந்தப் பட்டப்படிப்பின் பாடத்திட்டம், தொழில்நுட்பத் திறன் மற்றும் பல்கலைக்கழகத்தின் நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், அரசு வேலைவாய்ப்புகளில் அதன் தகுதியை அவ்வப்போது ஆய்வு செய்து தேவையான இடங்களில் பரிசீலிப்பது காலத்தின் தேவையாகும்.

தமிழகத்தின் நீலப் பொருளாதாரம் (Blue Economy), கடல்சார் வள மேம்பாடு, நவீன மீன்வள உள்கட்டமைப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் மீன்வளப் பொறியாளர்களின் பங்கு எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கவுள்ளது. எனவே, **மீன்வளப் பொறியியல் பட்டதாரிகளின் திறன்களை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் அரசுப் பணிகளில் உரிய வாய்ப்புகள் மற்றும் அங்கீகாரம் வழங்கப்படுவது, மாணவர்களின் எதிர்காலத்திற்கு மட்டுமல்ல, மீன்வளத் துறையின் நிலையான வளர்ச்சிக்கும் பயனளிக்கும்.



# வண்டலூரில் மாவட்ட அளவிலான யோகா சாம்பியன்ஷிப் போட்டியில் மாணவர்கள் அசத்தல்

வண்டலூர், ஜூலை.23-
செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த வெங்கம்பாக்கத்தில் குளோபல் ஸ்கூல் ஆப் யோகா சார்பில் அதன் நிறுவன தலைவர் கணேஷ் குமார் ஆலோசனை படி
செங்கல்பட்டு மாவட்ட யோகா சாம்பியன்ஷிப் போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை காலை நடைப்பெற்றது. இதில் செங்கல்பட்டு மாவட்ட முழுவதும் இருந்து 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இதில் வயது வாரியாக பல்வேறு பிரிவுகளில் மாணவ, மாணவியர்கள் இருபாலருக்கும் தனிதனியாக யோகா போட்டிகள் நடைபெற்றது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடித்த மாணவ, மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக உடற்பயிற்சி இயக்குனர் செல்வம் கலந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ், கோப்பைகள் வழங்கி கவுரவித்தார். இதில் செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகிகள் முத்துசாமி மற்றும் சங்கீதா ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்தனர்யோகா கற்று வரும் மாணவர்களின் திறமை வெளிகொண்டு வரும் வகையில் நடைபெற்ற இந்த போட்டியில் சிறிய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தங்களது யோகா திறமைகளை வெளிப்படுத்தி சாதனை படைத்தனர். இதில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கின்றனர் என்பதை குறிப்பிடத்தக்கது.

# கூடுவாஞ்சேரியில் காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு ஐம்பெரும் விழா

கூடுவாஞ்சேரி, ஜூலை.23-
செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட அருள்நகர் பகுதியில் புகழ்பெற்ற நீளம் மெட்ரிகுலேஷன் பள்ளி உள்ளது இதில் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு ஐம்பெரும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றன. இதில் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல்நிலை பெற்ற அரசு பள்ளி மற்றும் நீலன் பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு, அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா, மற்றும் நீலன் ஸ்டுடியோ திறப்பு விழா, ஸ்மார்ட் கணினி ஆய்வகம் திறப்பு, மற்றும் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது விழாவில் நீலன் கல்வி அறக்கட்டளை தலைவர் நீலன் அசோகன் தலைமை தாங்கினார். இதில் செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ தியாகராஜன், நீலன் பள்ளி சேர்மன் நீலன் அரசு, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முன்னதாக



நீலன் பள்ளி முதல்வர் ஸ்ரீதேவி அனைவரையும் வரவேற்றனர். விழாவில் சிறப்பு அழைப்பாளராக உயர்கல்வித்துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன், கலந்து கொண்டு காமராஜரின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி ஐம்பெரும் விழாவை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சி மற்றும் தற்காப்பு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அமைச்சர் விஸ்வநாதன் அரசு பள்ளி மற்றும் நீலன் பள்ளி மாணவர்களுக்கு உதவித்தொகை மற்றும் பரிசு கோப்பைகள் வழங்கி வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். மேலும் இவ்விழாவில் நகர பொறுப்பாளர் பார்த்தசாரதி பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் தவெக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம்மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027 தொடர்பான ஆலோசனைக்கூட்டம் தமிழ்நாடு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர் எம்.சுந்தரேஷ்பாபு, ,தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், முன்னிலையில் நடைபெற்றது

தேனி, ஜூலை.23-
தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027 தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன். முன்னிலையில், தமிழ்நாடு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர் எம்.சுந்தரேஷபாபு, நடைபெற்றது. தமிழ்நாடு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர் .எம்.சுந்தரேஷபாபு, செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தாவது, 2027 மக்கள் தொகைக் கணக்கெடுப்பான அரசாணை கடந்த ஆண்டு ஜுன் மாதம் வெளியிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து மக்கள் தொகைக் கணக்கெடுப் புக்கான ஆயத்தப்பணிகள் இந்தியா முழுவதும் ஏற்கனவே தொடங்கிவிட்டது. தமிழ்நாட்டிலும் முன்னேற்பாடுப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. முதல் கட்டம் வீட்டுப்பட்டியல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு. இரண்டாம் கட்டம் மக்கள்தொகை கணக்கெடுப்பு. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு



2027 இந்தியாவில் முதல் முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாகும்முதல் கட்டக் கணக்கெடுப்பு ஆகஸ்ட் 1 தேதி முதல் ஆகஸ்ட் 30ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதற்கு முன்னதாக 15 நாட்கள் சுய கணக்கெடுப்பு விவரங்களை ஜூலை 17 முதல் ஜூலை 31 வரை பொதுமக்கள் தாங்களாகவே பதிவேற்றம் செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது எனவே, பொதுமக்கள் தாங்களாகவே se.census.gov.in என்ற இணையதளத்தில் தங்கள் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

சுயகணக் கெடுப்பின்போது, 11 இலக்கம் கொண்ட எண் (Eleven digit code) தங்கள் தொலைப்பேசி எண்ணிற்கு வரும். அதனை, தங்கள் வீடுகளுக்கு கணக்கெடுப்பாளர்கள் வரும்போது அவர்களிடம் குறிப்பிடும்போது, நாம் பதிவேற்றம் செய்த விவரங்களை சரிபார்த்து இறுதி (approve) செய்வார்கள். சுயக்கணக்கெடுப்பிற்கான கால அவகாசம் முடிந்தபின், ஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 30 ஆம் தேதி வரை வீட்டுப்பட்டியல் மற்றும் வீட்டு கணக்கெடுப்பிற்கான களப்பணி நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைவரின் வீடுகளுக்கும் சுயக்கணக்கெடுப்பாளர்கள் வருகை தர உள்ளார்கள். சுய கணக்கெடுப்பு செய்யாதவர்களின் வீடுகளில் விவரங்களை சேகரிப்பார்கள். இந்த முதல் கட்டத்தில் 33 கேள்விகள் கேட்கப்படும். இந்த 33 கேள்விகளும் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 1,60,000 நபர்கள் இப்பணியில் ஈடுபட உள்ளார்கள். ஒரு கணக்கெடுப்பாளர் சராசரியாக 250 வீடுகளுக்கு சென்று விவரங்களை சேகரிக்க உள்ளார். தேனி மாவட்டத்தில் இதுவரை 6,500 குடும்பங்கள் சுய கணக்கெடுப்பு வசதியை பயன்படுத்தி அவர்களின் விவரங்களைப் பதிவு செய்துள்ளார்கள். மேலும், சுய கணக்கெடுப்பு வசதி குறித்த விவரங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான பல்வேறு பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சுய கணக்கெடுப்பு வசதி முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் தாமாகவே முன்வந்து இந்த வசதியை பயன்படுத்தி தங்கள் விவரங்களைப் பதிவு செய்யவேண்டும். முதல் கட்டத்தில் சேகரிக்கக்கூடிய கேள்விகள் இரண்டாம் கட்டத்துக்கு ஒரு அடித்தளமாக அமையும். எனவே, கணக்கெடுப்பாளர்கள் உங்க வீட்டுக்கு வரும்பொழுது பொதுமக்கள் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து சரியான தகவல்களை தர வேண்டும். மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் நாம் சேகரிக்கக் கூடிய தகவல்கள் தான் வளர்ச்சி திட்டமிடலுக்கான அடிப்படையாக அமையும். எனவே மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027 பணிகளை 100% நிறைவு செய்வதற்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநர். எம்.சுந்தரேஷ்பாபு, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணிக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லோகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். இராமகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தக்கைப்பூண்டு சாகுபடியால் மண் வளம் அதிகரிப்பு

## நெல் மகசூல் உயர்வு!ATMA திட்டத்தின் தொழில்நுட்ப ஆலோசனையால் மதுரை விவசாயி சாதனை

மதுரை, ஜூலை.23-

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரத்திற்குட்பட்ட மேலமாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சங்கர் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பின்பற்றி தக்கைப்பூண்டை பசுந்தாள் உரப் பயிராக சாகுபடி செய்து, மண் வளத்தை மேம்படுத்தி நெல் மகசூலை கணிசமாக உயர்த்தியுள்ளார்.



2025-26ஆம் ஆண்டில் ATMA திட்டத்தின் கீழ், திருப்பரங்குன்றம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மீனாட்சி சுந்தரம் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, விவசாயி சங்கருக்கு செயல்விளக்கத் திடல் அமைப்பதற்காக 20 கிலோ தக்கைப்பூண்டு விதைகளும், 25 கிலோ மண்புழு உரமும் வழங்கப்பட்டன.விதைத்த 40 முதல் 60 நாட்களுக்குள் பூக்கும் பருவத்தில் பயிரை மண்ணில் மடக்கி உழவு செய்ததன் மூலம், நைட்ரஜன் சத்து அதிகரித்து மண் வளம் மேம்பட்டதுடன், கரிமச் சத்தும் உயர்ந்து, அடுத்தடுத்த நெல் சாகுபடியில் நல்ல வளர்ச்சியும் அதிக மகசூலும் கிடைத்துள்ளது.

மேலும், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி ஆகியோர் தொடர்ந்து தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி விவசாயிக்கு உறுதுணையாக செயல்பட்டனர். இந்த வெற்றியைத் தொடர்ந்து, அப்பகுதியைச் சேர்ந்த பிற விவசாயிகளும் தங்களது வயல்களில் தக்கைப்பூண்டை பசுந்தாள் உரப் பயிராக சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## திருப்பூர் மாவட்டம். மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம். மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னணியில் நடைபெற்றது

திருப்பூர், ஜூலை.23-

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.



அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 696 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலை யிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கை யினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே அறிவுறுத்தினார்கள். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) கண்ணன், தனிதுணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) பத்மபிரியா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சதீஸ் மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## மேட்டுப்பாளையத்தில் ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையத்தின் 86வது கிளை திறப்புவிழா

மேட்டுப்பாளையம், ஜூலை.23-

இந்தியாவின் முன்னணி கருத்தரித்தல் சிகிச்சை நிறுவனமான ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையத்தின் 86வது கிளை, கோவை மெயின் ரோடு, மேட்டுப்பாளையத்தில் பிரம்மாண்டமாக திறக்கப்பட்டது.தொடக்க விழாவில், நிறுவனரான டாக்டர் எஸ். சந்திரலேகா, மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என். சுனில் ஆனந்த், இந்திய மருத்துவ சங்கம் (IMA) பொருளாளர் டாக்டர் மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி புதிய கிளையை திறந்து வைத்தனர்.40 ஆண்டுகளுக்கும் மேலாக கருத்தரிப்பு மருத்துவத் துறையில் சேவையாற்றி வரும் ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையம், இதுவரை 3 லட்சத்திற்கும் மேற்பட்ட தம்பதியினருக்கு குழந்தைப் பேறு கிடைக்க உதவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. உலகத் தரத்திலான மருத்துவ உபகரணங்கள், நவீன ஆய்வகங்கள் மற்றும் அனுபவமிக்க மருத்துவர்கள் மூலம் IVF, IUI, ICSI, கருத்தரிப்பு பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட லேப்ராஸ்கோபிக் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேட்டுப்பாளையம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இந்த உயர்தர கருத்தரிப்பு சிகிச்சைகள் எளிதில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் புதிய கிளை தொடங்கப்பட்டுள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.புதிய கிளை தொடக்கத்தை முன்னிட்டு, ₹5,000 மதிப்புள்ள விந்தணு பரிசோதனை வெறும் ₹1,500க்கு வழங்கப்படுவதாகவும், ஸ்பாட் புக்கிங் செய்த தம்பதியினருக்கு இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் இலவச ஸ்கேன் பரிசோதனை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.மேலும், IUI, IVF, ICSI உள்ளிட்ட உயர்தர சிகிச்சைகளுக்கு சிறப்பு கட்டணச் சலுகைகள் மற்றும் பிரத்யேக சிகிச்சை தொகுப்புகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

குழந்தைப் பேறு கனவை நனவாக்க விரும்பும் மேட்டுப்பாளையம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த தம்பதியினர் இந்த சிறப்பு சலுகைகளை பயன்படுத்திக் கொள்ளலாம் என ஐஸ்வர்யா கருத்தரித்தல் மைய நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.




## மதுரை அரசு இராசாசி மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை

மதுரை, ஜூலை.23-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையை சேர்ந்த நிரோசனா என்பவர் எலும்பு புற்று நோயால் (Bone Cancer) பாதிக்கப்பட்ட தனது 15 வயதான மகளை அறுவை சிகிச்சைக்காக மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சேர்த்தனர்.

அவர்க்கு எலும்பியல் துறை மருத்துவர்கள் எலும்ப புற்றுநோய் கட்டியை வெற்றிகரமாக அகற்றி எலும்பு வங்கி மூலம் மாற்று எலும்பு மூலம் அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்துள்ளனர். இது குறித்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில்

உடல்தானம் மற்றும் உறுப்பு தானம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு அதிகரித்து வரும் நிலையில், 'எலும்பு வங்கி' (Bone Bank) பற்றிய விழிப்புணர்வும் தற்போது முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது.

மருத்துவ உலகில் எலும்பு வங்கி என்பது, தானமாக பெறப்படும் எலும்புத் திசுக்களை பாதுகாப்பாக சேமித்து, தேவையான நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சைகளில் பயன்படுத்தும் நவீன மருத்துவ சேவையாகும்.

கடுமையான விபத்துகள், புற்றுநோயால் எலும்பு பாதிப்பு, பிறவிக் குறைபாடுகள் மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகளில் எலும்பு தானம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் மூலம் நோயாளிகள் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழகத்தில் முதன்முறையாக அரசு மருத்துவமனையில் எலும்பு வங்கி தொடங்கப்பட்டதாகவும், இதுவரை நூற்றுக்கணக்கான நோயாளிகள் இதன் மூலம் பயனடைந்துள்ளதாகவும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எலும்பு தானம் செய்ய விரும்புவோர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முன்வருவதன் மூலம் பலரின் வாழ்வில் நம்பிக்கை விதைக்க முடியும். உடல்தானம், உறுப்பு தானம் போன்று எலும்பு தானம் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதில் டீன் அருள் சுந்தரேஷ் மருத்துவக் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் முடநீக்கியல் துறை தலைவர் பதியரசகுமார் எலும்பு வங்கி பொறுப்பாளர் திருமலைமுருகன் மண்டல மருத்துவ அலுவலர் கேப்டன் சரவணன் உட்பட பலர் உடன் இருந்தனர்.



## மேலக்கோட்டையில் மக்கள் தொடர்பு முகாம்145 பயனாளிகளுக்கு ரூ.53.06 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஆட்சியர்

மதுரை, ஜூலை.23-

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் மேலக்கோட்டை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், 145 பயனாளிகளுக்கு ரூ.53 லட்சத்து 6 ஆயிரத்து 621 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., வழங்கினார். முகாமில் பேசிய ஆட்சியர், பொதுமக்களின் குறைகளை விரைந்து தீர்ப்பதற்கும், அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகள் நேரடியாக மக்களை சென்றடைவதற்கும் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது புதன்கிழமையன்று மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார். முன்கூட்டியே கிராமங்களில் மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அவற்றின் அடிப்படையில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் கூறினார்.இந்த முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, உணவுப்பொருள் வழங்கல் துறை, சமூக பாதுகாப்புத் திட்டம், தோட்டக்கலை, வேளாண்மை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தொடக்க வேளாண் கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் மொத்தம் 145 பயனாளிகளுக்கு ரூ.53.06 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழும் பயனாளிகளுக்கு அட்டைகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கேடயங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கி பாராட்டினார். பல்வேறு அரசு துறைகளின் நலத்திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளையும் அவர் பார்வையிட்டார்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க. அன்பழகன், உதவி ஆட்சியர் (பயிற்சி) சித்தார்த் போகர்னா, திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் சிவஜோதி மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ டெல்லியில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே மாவட்டத் தலைவர் எம்.சி. ரகு தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மத்திய அரசின் அடக்குமுறைக்கு எதிராகவும், ராகுல் காந்தி மற்றும் கைது செய்யப்பட்ட காங்கிரஸ் எம்.பி.க்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.




## நீட் உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளை கண்டித்து அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூலை.23-

தேசிய தேர்வு முகமையின் நிர்வாகக் குறைபாடுகள், நீட், கியூட், யூஜிசிநெட் உள்ளிட்ட தேர்வுகளில் வினாத்தாள் கசிவு மற்றும் கல்வித்துறை சீர்கேடுகளை கண்டித்து, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் கிருஷ்ணகிரி தாலுகா அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசின் கல்விக் கொள்கை மற்றும் தேர்வு நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்க நிர்வாகிகள் வலியுறுத்தினர்.

## கிராமங்களைச் சுற்றி குவாரிகள் அமைவதை எதிர்த்து வட்டாட்சியர் அலுவலகம் முற்றுகை

திருச்சி, ஜூலை.23-

திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றிய பகுதியில் உள்ள செவந்தாம்பட்டி ஊராட்சியில் தொடர்ந்து குவாரிகள் அமைவதற்கு அனுமதி அளித்த வட்டாட்சியரை கண்டித்தும், குவாரிகளின் அனுமதி ரத்து செய்ய வலியுறுத்தியும், 5 கிராம மக்கள் மருங்காபுரி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு தர்ணாவில் ஈடுபட்டு வருகின்றனர்




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161